


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.9.2024) முகாம் அலுவலகத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சொ.க. கண்ணன் பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

### திருவல்லிக்கேணி - நடுக்குப்பம் பகுதியில் மீன் அங்காடி -

# கைப்பந்து விளையாட்டு மைதானம் - உள்விளையாட்டு அரங்கம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, செப்.22-

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு - 120, திருவல்லிக்கேணி, நடுக்குப்பம் பகுதியில் மூலதன நிதியின் கீழ், ரூ.26.42 இலட்சம் மதிப்பில் புனரமைத்து மேம்படுத்தப்பட்ட மீன் அங்காடியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.09.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

நடுக்குப்பம் மீன் அங்காடியானது 218.10 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இங்கு இரும்பு படிக்கட்டுகள் மற்றும் கழிவுநீர் செல்வதற்கான வசதிகள் புதிதாக அமைக்கப்பட்டு, தண்ணீர் வசதி, மின்வசதி மற்றும் கழிப்பறை வசதி மேம்பாடு உள்ளிட்ட புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், நடுக்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், சைல்ட்லைஃப் (Child Life NGO) தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் ரூ.41 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் கேரம், டேபிள் டென்னிஸ், இறகுப்பந்து, உடற்பயிற்சிக் கூடம் மற்றும் சதுரங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய உள்விளையாட்டு அரங்கத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பின்னர், அப்பகுதியில் உள்ள குழந்தைகள் மையத்தில் ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி கலந்துரையாடினார்.

முன்னதாக, நடுக்குப்பம் பகுதியில் உள்ள சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சைல்ட் லைஃப் (Child Life NGO) தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சாந்தி ராஜசேகரன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயாராணி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன், மாமன்ற ஆளுங்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர் திருமதி ரா.மங்கை ராஜ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - அ.ரவி - கணபதி ராஜ்குமார் எம்.பி. - கே.ஈஸ்வரசாமி எம்.பி. பங்கேற்பு:

# கோவை மண்டல - கழக விளையாட்டு மேம்பாட்டு அணி கலந்துரையாடல் கூட்டம்!

## அமைச்சர் சு.முத்துசாமி சிறப்புரை! அணிச் செயலாளர் தயாநிதி மாறன் அறிக்கை!

கோவை, செப்.22-

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி கோவை மண்டல கலந்துரையாடல் கூட்டம் நாளை நடைபெறுகின்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்று சிறப்பிக்கிறார் என்றும், மேலும் இதில் கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா. கார்த்திக், கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி ஆகியோர் பங்கேற்கின்றனர் என்றும், தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம், இன்று (22.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், கோவை மாநகர் மாவட்டம், ஜி.ஆர்.ஜி. நகரில் அமைந்துள்ள "ஜெ.ஆர்" ஹாலில் நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சிக்கு கோவை மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.எம்.சஞ்சய் குமார் தலைமையேற்கின்றார். மண்டலப் பொறுப்பாளரும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணைச் செயலாளருமான மு.வாசிம் ராஜா வரவேற்புரையாற்றுகின்றார்!

இந்த கலந்துரையாடல் கூட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கோவை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, கோவை மாநகர மேயர் ஆர்.ரங்கநாயகி, கழக சொத்து பாதுகாப்புக் குழுத் துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன், கோவை மாநகர துணை மேயர் ரா. வெற்றிச்செல்வன், பகுதிக் கழகச் செயலாளர் ஏ.எஸ். நடராஜன், வட்டக் கழகச் செயலாளர் துரை.செந்தமிழ் செல்வன், அணியின் மாநில துணைச் செயலாளர்கள் பைந்தமிழ் பாரி, எஸ். ஆர்.பார்த்திபன், வே.நம்பி, நிவேதா ஜெசிகா, ஏ.வி.ஆர். கோபால்ராம், எஸ்.கார்த்திக், சுரேஷ்.ஜெ.மனோகரன், வே.கௌதமன், கோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் தொ.மு.தியாகராஜன், கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் ந.ஜெகதீஸ்வரன், சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் அ.அன்புக்கரசு, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஏ.செந்தில் குமார், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் த.ரமேஷ், தேனி வடக்கு மாவட்ட அமைப்பாளர் தி. ராஜசேகரன், தேனி தெற்கு மாவட்ட அமைப்பாளர் ரா.வசந்தன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ல.கார்த்திக், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஆர்.பார்த்தசாரதி, துணை அமைப்பாளர்கள் மு.சு.சித்திக், வி. ஜெகநாதன், வி.உதயகுமார், ஜெ.ராகுல் ராம், க.வெங்கடேஸ்வரன், கே.என்.ராஜேஷ், ஆர். அசோக் குமார், கி.வினோத் குமார், பா.சதீஷ்குமார், சரவணன் கணபதி, கா.தனக்குமார், ச.பாபு, சி.பாலசுப்ரமணி, மு.கோபிநாத், க. முபாரக், வா.ஆறுமுக பாண்டி, பா.பார்த்திபன், ப.மனோகரன், க.சரவணப் பிரியன், ச.அபுதாஹிர், பி.வி.சரவணன், சு.சதீஷ்குமார், பெ.சுரேஷ்குமார், அ.ரமேஷ்குமார், ந.சுரேஷ், சௌ.ஜெயபிரகாஷ், ச.பிரதீப், ச.அருண், ரா.ராஜேஷ், ஆ.இரவிக்குமார், எம்.வி.பி. பிரபாகரன், எஸ்.ராஜ்குமார், சி.நடராஜ், க.சத்தியன், அ.மயில்சாமி, ம.பிரபு, ரா.திலீபன், பி.எம்.தினேஷ் ராஜா, ரா.பச்சமுத்து, ரா. செல்வம், ச.அம்சவள்ளி, மோ.கிருஷ்ணகுமார், இரா. மதியழகன், முனைவர். கெ.சு.தங்கப்பாண்டியன், தி.செல்வமணி, வெ.ரமேஷ் பாபு, எம்.ஆர்.கிருஷ்ணவேணி, இரா.லட்சுமணபெருமாள், ப.விஜயகுமார், ஆர்.செல்வகுமார், மு.அழகர் ராஜா, கெ.இளவரசன், ப.கார்த்திக், மோ.ஆனந்த குமார், வி.பி.வேல்முருகன், ரா.பிரசாத், அ.அருண் அரவிந்த், சு.பிரவீன்குமார், எம்.கொடித்துரை, எம். சேது ராஜா, த.சித்திரேசன், ஜெ.சங்கர், மு.அரவிந்த் குமார், பா.சந்திரமூர்த்தி, பா.சிபி சுந்தர், மா.ராஜலிங்கம், பொ.ராஜேஷ், வி.தன்ராஜ், சா.ஜெயக்குமார், எம்.வெங்கடேசன், ஜெ. அருண், எஸ்.முகமது பிலால், ஏ.சி.அய்யப்பன், எம். வினோத்குமார் ஆகியோர் பங்கேற்கின்றனர். கோவை மாநகர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் செ. பாலமுரளிகிருஷ்ணன் நன்றியுரைவாற்றவிருக்கின்றார்.

இவ்வாறு கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், எம்.பி. தெரிவித்துள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதி கணியம்பாடி ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில்வெற்றி பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்று சிறப்புரை ஆற்றினார். உடன் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், ஒன்றிய அவைத்தலைவர் சிவக்குமார், ஒன்றியச் செயலாளர் வி.பி.எஸ்.கலைச்ந்தர், பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன், கணியம்பாடி ஒன்றிய குழு தலைவர் திவ்யாகமல் பிரசாத், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவாஅண்ணாமலை, ராணி ஜெயக்குமார், பொருளாளர் கோட்டீஸ்வரன், மாவட்டப் பிரதிநிதிகள் மா.வெங்கடேசன் சங்கர், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதாசீனிவாஸ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தொன்போஸ்கோ, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சி.பாலாஜி தொகுதி மகளிர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கவிதா உமாசங்கர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சாமிநாதன், மாவட்ட குழு உறுப்பினர் த.பாபு, ஆர்.செந்தில்குமார், வல்லம் ஊராட்சி செயலாளர் மற்றும் ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின்

# டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளுக்கு தடை!

## மும்பை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

மும்பை, செப். 22-

ஒன்றிய அரசு புதிய டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகளை கடந்த ஆண்டு வெளியிட்டது. இதற்கு எதிராக மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு மாறுபட்ட தீர்ப்பை வழங்கியது. இதனை தொடர்ந்து வழக்கு மூன்றாவது நீதிபதிக்கு அனுப்பப்பட்டது. இதனிடையே, *Fact check* அமைப்பை உருவாக்கும் வகையில் ஒன்றிய அரசு மீண்டும் திருத்திய விதிமுறைகளை வெளியிட்டது. இதற்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது. இந்த விதிமுறைகள் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தின் மீதான தாக்குதல் என்று உச்சநீதிமன்றம் கூறியது. மும்பை உயர் நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு வெளியாகும் வரை *Fact check* யூனிட்டை அமைக்க கூடாது என்று உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, வழக்கை விசாரித்த மும்பை உயர்நீதிமன்ற மூன்றாவது நீதிபதி, தற்போது தீர்ப்பு வழங்கி உள்ளார். அதில், டிஜிட்டல் தகவல் தொழில்நுட்ப விதிமுறைகள் அரசியல் சாசன பிரிவு 14 மற்றும் 19க்கு எதிரானது என்று கூறி, அதற்கு தடை விதித்த உத்தரவை உறுதி செய்வதாக தீர்ப்பளித்தார்.

### விளாத்திகுளம் தொகுதியில்

# கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, செப். 22-

தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள கனிமொழி கருணாநிதி எம்.பி. விளாத்திகுளம் தொகுதியில் இன்று (22.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கிறார் என வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி. பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நடைபெற்று முடிந்த 2024 - நாடாளுமன்றத் தேர்தலில் தூத்துக்குடி நாடாளுமன்ற தொகுதியில் I.N.D.I.A கூட்டணி சார்பில் தி.மு.க வேட்பாளராக கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியோடு கனிமொழி கருணாநிதி அவர்கள் போட்டியிட்டு 5,40,729 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். கனிமொழி கருணாநிதி அவர்களை எதிர்த்து போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் டெப்பாசிட் இழந்தனர்.

தன்னை பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்த தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து வருகிறார்.

அதன்படி 22.09.2024 ஞாயிற்றுக்கிழமை விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புதூர் மேற்கு ஒன்றியம், கோவில்பட்டி மேற்கு ஒன்றியம், மற்றும் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியம் ஆகிய பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் தன்னுடைய நன்றி அறிவிப்பு பிரச்சாரத்தை மேற்கொள்ள இருக்கிறார்.

22.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30 மணி அளவில் புதூர் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கருப்பூர் கிராமத்தில் நன்றி தெரிவிக்கும் பிரச்சாரப் பயணத்தை தொடங்கும் அவர் தொடர்ந்து மாலை 6.00 மணிக்கு கடலையூர், 6.30 மணிக்கு எட்டையாபுரம், இரவு 7:00 மணிக்கு கீழஈரால், இரவு 7:30 மணிக்கு எப்போதும்வென்றான், இரவு 8:00 மணிக்கு பசுவந்தனையில் நிறைவு செய்கிறார்.

நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களுக்கு அந்தந்த பகுதிக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு ஏற்பாடுகளை செய்திடவும், I.N.D.I.A கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குறைகளை மனுவாக எழுதிக் கொடுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# அடுக்குமாடி குடியிருப்புத் திட்ட அனுமதிக்கு ரூ.27 கோடி லஞ்சம்!

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் உள்பட 11 பேர் மீது வழக்குப் பதிவு!

சென்னை, செப். 22-

சென்னையில் தனியார் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டத்துக்கு அனுமதி வழங்க ரூ.27.9 கோடி லஞ்சம் பெற்றதாக முன்னாள் அ.தி.மு.க. அமைச்சரும், தற்போதைய எம்.எல்.ஏ.வுமான ஆர்.வைத்திலிங்கம், அவரது இரு மகன்கள் உள்பட 11 பேர் மீது ஊழல் தடுப்புப் பிரிவு வழக்குப் பதிவு செய்தது.

தமிழகத்தில் 2011 முதல் 2016- ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தவர் வைத்திலிங்கம். தற்போது முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளரான வைத்திலிங்கம், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு தொகுதி எம்.எல்.ஏ.வாக உள்ளார்.

சென்னை பெருங்களத்தூரில் ஸ்ரீராம்குழுமத்துக்குச் சொந்தமான 'ஸ்ரீராம் பிராபர்ட்டீஸ் அன்ட் இன்ப்ராஸ்டெரக்சர் பிரைவெட் லிமிடெட்' என்ற நிறுவனம் 57.94 ஏக்கர் நிலத்தில் 24 பிளாக்குகளாக 1,453 வீடுகள் கொண்ட அடுக் குமாடி குடியிருப்புகளை கட்ட திட்ட அனுமதி கோரி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் (சி.எம்.டி.ஏ.) 2013ஆம் ஆண்டு விண்ணப்பித்தது.

ஆனால், அந்தத் திட்டத்துக்கு 2 ஆண்டுகளுக்கு மேலாக அனுமதி வழங்காத நிலையில், 2016ஆம் ஆண்டு திடீரென அனுமதி வழங்கப்பட்டதாம். இந்த அனுமதி வழங்குவதற்கு பெருமளவு லஞ்சம், அப்போதைய அமைச்சரான வைத்திலிங்கத்துக்கு வழங்கப்பட்டதாக சென்னையைச் சேர்ந்த அறப்போர் இயக்கம் குற்றஞ்சாட்டியது.

**ரூ.27.9கோடி லஞ்சம்:**

இது தொடர்பாக அந்த இயக்கம், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுக்கு வழங்கிய புகார் மனுவில் கூறப்பட்ட தகவல்கள்:

ஸ்ரீராம் நிறுவனம் அங்கு குடி யிருப்பு கட்ட திட்ட அனுமதிக்காக வைத்திலிங்கத்துக்கு ரூ.27.9 கோடி லஞ்சமாக வழங்கியுள்ளது. அந்த பணம் அந்த குழுமத்துக்கு சொந்தமான 'பாரத் கோல் கெமிக்கல் பிரைவெட் லிமிடெட்' மூலம் வைத்திலிங்கத்தின் மகன்கள் பிரபு, சண்முகபிரபு, உறவினர் பன்னீர்செல்வம் ஆகியோர் இயக்குநர்களாக இருந்த 'முத்தம்மாள் எஸ்டேட் பிரைவெட் லிமிடெட்'என்ற நிறுவனத்துக்கு கடனாக வழங்கப்பட்டது போல காட்டப்பட்டுள்ளது. ஆனால், முத்தம்மாள் நிறுவனத்துக்கு கடன் வழங்கிய பாரத் நிறுவனம், தாங்கள் வாங்கிய ரூ.280 கோடி கடனை திருப்பி செலுத்த முடியாமல், தங்களுடைய சொத்துகளை விற்று செலுத்துவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. மேலும், வேறு சில தனியார் நிறுவனங்கள் வணிகத்துக்காக பாரத் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது போல ரூ.27.9 கோடி கொண்டு வரப்பட்டுள்ளது. கடன் பெற்ற முத்தம்மாள் நிறுவனம் 2014ஆம் ஆண்டில் இருந்து ஒரு ரூபாய் கூட வணிகம் செய்யவில்லை என வருமானவரித் துறையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

### சென்னை உயர்நீதிமன்ற

## கூடுதல் நீதிபதிகள் ஐந்து பேர் நிரந்தர நீதிபதிகளாக நியமனம்!

புதுடெல்லி, செப். 22 –

சென்னை உயர் நீதிமன்றத்தில் கூடுதல் நீதிபதிகளாக உள்ள விக்டோரியா கவுரி, பி.பி. பாலாஜி, கே.கே. ராமகிருஷ்ணன், ஆர்.கலைமதி மற்றும் கே.ஜி.திலகவதி ஆகியோரை நிரந்தர நீதிபதிகளாக நியமிக்க கொலிஜியம் அண்மையில் பரிந்துரைத்திருந்தது. இதனை ஏற்றுக் கொண்டு ஐந்து பேரையும் சென்னை உயர் நீதிமன்ற நிரந்தர நீதிபதிகளாக நியமித்து குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார். அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி சமீம் அஹமத்ஜ, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு இடமாற்றியும் குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! "வயநாடு நிலச்சரிவு பேரிடருக்கு, இதுவரை ஒன்றிய பா.ஜ.க. அரசு, எந்தவித நிதி உதவியும் செய்யவில்லை" என்று கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் தனது மனக் குமுறலை வெளிப்படுத்தி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! வயநாடு பேரிடருக்கு நிதி உதவி செய்வதால் பா.ஜ.க.வுக்கு அரசியல் ரீதியாக என்ன லாபம் ஏற்பட்டுவிடப் போகிறது ?**

**எந்தக் காலத்திலும் காவி அங்கே கரைசேரப் போவதில்லை; தாமரை அங்கே மலரப் போவதில்லை !**

**வயநாடு என்றாலே, பா.ஜ.க.வைப் பொருத்தவரை " பய நாடு " தானே !**